NHS

ஒன்றிணைந்து உடல்நலப் பராமரிப்பை மேம்படுத்துதல் 2020 முதல் 2030 வரை

# எங்களுடன் பேசுங்கள்

**எப்சம் மற்றும் செயிண்ட் ஹெலியர் மருத்துவமனைகளில் முதலீடு செய்வதற்கும், எப்சம், செயிண்ட் ஹெலியர் அல்லது சட்டன் மருத்துவமனையில் அமையவுள்ள ஒரு சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனையைக் கட்டுவதற்குமான எங்கள் முன்மொழிவு பற்றி எங்களுடன் பேசுங்கள்.**



இது NHS சர்ரே டவுன்ஸ் மருத்துவ ஆணையக் குழு, NHS சட்டன் மருத்துவ ஆணையக் குழு மற்றும் NHS மெர்டன் மருத்துவ ஆணையக் குழு ஆகியவற்றால் நடத்தப்படும் ஒரு முறையான பொதுக் கலந்தாலோசனை ஆகும். இது 2020 ஜனவரி 8 முதல் ஏப்ரல் 1 வரை நடைபெற இருக்கிறது.

செப்டம்பர் 2019-இல், எப்சம் மற்றும் செயிண்ட் ஹெலியர் மருத்துவமனைகளில் தற்போது உள்ள கட்டிடங்களை மேம்படுத்துவதற்கும், எப்சம், செயிண்ட் ஹெலியர் அல்லது சட்டன் ஆகிய மூன்று இடங்களில் உள்ள ஏதாவதொரு மருத்துவமனையில் ஒரு புதிய சிறப்பு அவசரச்சிகிச்சை மருத்துவமனையைக் கட்டுவதற்கும் எங்களுக்கு £500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முன்மொழிவுகளின் கீழ்:

- பெரும்பாலான சேவைகள் எப்சம் மற்றும் செயிண்ட் ஹெலியர் மருத்துவமனைகளில் புதுப்பிக்கப்பட்ட கட்டிடங்களில் தொடர்ந்து வழங்கப்படும், இந்த இரண்டு மருத்துவமனைகளும் ஒரு நாளில் 24 மணிநேரமும், ஆண்டுக்கு 365 நாட்களும் இயங்குவதாகவும், ஒவ்வொரு மருத்துவமனையும் அவசரச் சிகிச்சை மையங்களைக் கொண்டதாகவும் இருக்கும், மற்றும்
- மிகவும் உடல்நிலை சரியில்லாமல் வரும் நோயாளிகள், சிறப்பு வல்லுநர்களின் பராமரிப்பு தேவைப்படுபவர்கள், மருத்துவமனையில் நடைபெறும் பிரசவங்கள் ஆகிய அனைத்துக் கவனிப்புகளும் அதிநவீன கட்டிடங்களில் ஒரே இடத்தில் கிடைக்கும் விதமாக ஆறு முக்கியச் சேவைகளை நாங்கள் ஒன்றாக இணைப்போம். சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனைப் பணியாளர்கள் இரவுபகலாக நிபுணத்துவமிக்க பராமரிப்பை வழங்க ஒன்றிணைந்து பணிபுரிய முடியும் என்பது இதன் அர்த்தமாகும். இந்தச் சேவைகள் எப்சம் மருத்துவமனை, செயிண்ட் ஹெலியர் மருத்துவமனை அல்லது சட்டன் மருத்துவமனையில் அமைந்திருக்கலாம், ஆனால் நாங்கள் விரும்பித் தேர்ந்தெடுத்த இடம் சட்டன் மருத்துவமனை ஆகும்.

**எங்களுடன் பேசுங்கள், மேலும் இந்த முன்மொழிவுகள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை எங்களிடம் சொல்லுங்கள். உங்கள் கருத்துக்களைக் கவனமுடன் கேட்கிறோம்.**

Crystal Mark 23225
Clarity approved by Plain English Campaign


£500
மில்லியன்
மருத்துவமனைக்
கட்டிடங்களுக்கான
முதலீடு
சர்ரே டவுன்ஸ்
சட்டன்
மெர்டன்

# ஒன்றிணைந்து உடலநலப் பராமரிப்பை மேம்படுத்துதல் - கலந்தாலோசனைக்கான கேள்விகள்

**எப்சம் மற்றும் செயிண்ட் ஹெலியர் மருத்துவமனைகளின் எதிர்காலம் பற்றிய பொதுக் கலந்தாலோசனையின் ஒரு பகுதியாக உள்ளூர் பொதுமக்களிடமும் பணியாளர்களிடமும் கேட்பதற்காக எங்களிடம் ஆறு கேள்விகள் உள்ளன. இந்தக் கலந்தாலோசனை, ' 2020 முதல் 2030 வரை ஒன்றிணைந்து உடல்நலப் பராமரிப்பை மேம்படுத்துதல்' எனப்படுகிறது.**

**கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு முன்னர் எல்லா விஷயங்களும் உங்களுக்குத் தெரிந்திருப்பதை உறுதிசெய்ய, தயவுசெய்து எங்களது சுருக்கமான கலந்தாலோசனை ஆவணத்தை படிக்கவும். கலந்தாலோசனை சுருக்க ஆவணத்தை எங்கள் இணையதளத்தில் நீங்கள் காணலாம் (ஆவணத்தைப் பெற www.improvinghealthcaretogether.org.uk என்ற இணையதளத்தைப் பார்வையிட்டு, தேடல் பெட்டியில் 'சுருக்கமான பொதுக் கலந்தாலோசனை ஆவணம் (summary public consultation document)' என தட்டச்சு செய்யவும்) அல்லது, நாங்கள் உங்களுக்கு ஒரு நகல் அனுப்ப வேண்டும் என நீங்கள் விரும்பினால், hello@improvinghealthcaretogether.org.uk என்ற முகவரிக்கு எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது 02038 800 271 என்ற எண்ணில் எங்களை அழைக்கவும் அல்லது 07500 063191 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பவும்.**

**அந்த ஆவணத்தின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

## NHS சேவைகளில் ஏன் மாற்றம் தேவைப்படுகிறது

அடுத்து வரும் தலைமுறையினருக்கு சர்ரே டவுன்ஸ், சட்டன் மற்றும் மெர்டன் பகுதிக்குள் மருத்துவமனைச் சேவைகளை நாம் அமைக்க வேண்டியிருந்தால், எப்சம் மற்றும் செயிண்ட் ஹெலியர் மருத்துவமனைகள் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டிய குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றன. ஜனவரி 2018 -இல், சர்ரே டவுன்ஸ், சட்டன் மற்றும் மெர்டனில் உள்ள மூன்று NHS மருத்துவ ஆணையக் குழுக்கள் எப்சம் மற்றும் செயிண்ட் ஹெலியர் மருத்துவமனைகளில் உள்ள நீண்டகால சவால்களுக்கு சிறந்த தீர்வு காண்பதற்கு '2020 முதல் 2030 வரை ஒன்றிணைந்து உடல்நலப் பராமரிப்பை மேம்படுத்துதல்' என்ற கலந்தாலோசனை முறையை அமைத்துள்ளன.

நாங்கள் ஏன் உள்ளூர் NHS சேவைகளை வழங்கும் முறையை மாற்ற வேண்டும் என்பதற்கு மூன்று முக்கியக் காரணங்கள் உள்ளன.

**தரம் –** எப்சம் மற்றும் செயிண்ட் ஹெலியர் மருத்துவமனைகள் மிக முக்கியமான அவசரகாலச் சேவைகள் சிலவற்றுக்கு போதுமான நிபுணத்துவ மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனைப் பணியாளர்களைப் பெற்றிருக்கவில்லை. எங்கள் மருத்துவமனைச் சேவைகளை பாதுகாப்பாக வைத்திருக்க தற்காலிக மருத்துவமனைப் பணியாளர்களுக்காக நாங்கள் பெரும் தொகையைச் செலவிடுகிறோம், அவ்வாறு செலவிட்டாலும் சில மருத்துவப் பராமரிப்புகளுக்கான முக்கியமான தேசிய மற்றும் ராயல் காலேஜ் ஆஃப் எமர்ஜென்சி மெடிசின் தரநிலைகளை எங்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை.

**கட்டிடங்கள் –**
மருத்துவமனையின் பல கட்டிடங்கள் NHS -ஐ விடப் பழமையானதாக இருக்கின்றன, மற்றும் மருத்துவமனையின் பாதிக்கு மேற்பட்ட இடங்கள் நவீன உடல்நலப் பராமரிப்புத் தரங்களுக்கேற்ப நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கப் பொருத்தமானதாக இல்லாமலிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளன.

**நிதி –** நாங்கள் எதிர்கொண்டிருக்கும் தர மற்றும் கட்டிடப் பிரச்சனைகள் உள்ளூர் NHS-இன் நிதி நிலை மிக மோசமாக இருப்பதற்குக் காரணமாக இருக்கின்றன. எங்கள் நிபுணத்துவப் பணியாளர்களின் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கு தற்காலிகப் பணியாளர்களை நியமிப்பதிலும், கட்டிடங்களை அவசரமாகப் பழுதுபார்ப்பதற்கும் நாங்கள் மிக அதிகமான தொகையைச் செலவழிக்க வேண்டியிருக்கிறது.

இதனால் தான் உள்ளூர் சேவைகளை மாற்ற வேண்டியிருக்கிறது.



# எங்கள் மருத்துவமனைகளில் நாங்கள் பணிபுரியும் முறையை எவ்வாறு மாற்றுவது என்பதற்கான எங்களது திட்ட முன்மொழிவு


எங்கள் மருத்துவமனைகளை உள்ளூர் மக்களுக்கு பாதுகாப்பானதாக ஆக்குவதற்கும், நிபுணத்துவ வல்லுநர் பணியாளர்களைக் கவர்வதற்கும், நமது நோயாளிகளை புதுமையான, அதிநவீன கட்டிடங்களில் கவனித்துக்கொள்வதற்கும் சிறந்த வழியை அமைக்க நாங்கள் £500 மில்லியன் தொகையை முதலீடு செய்ய விரும்புகிறோம். வேலை செய்வதற்கான புதிய வழியை உருவாக்க எங்கள் சேவைகளைப் பயன்படுத்தும் மக்களிடம் நாங்கள் கருத்துக்களைக் கேட்டிருக்கிறோம், மற்றும் எங்கள் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனைப் பணியாளர்களுடன் இணைந்து செயல்பட்டிருக்கிறோம். உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும், நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இந்த வேலை வழிமுறை முயற்சிக்கப்பட்டு பரிசோதித்துப் பார்க்கப்பட்டுள்ள இடங்களில் பணிபுரியும் மூத்த மருத்துவர்களிடமிருந்தும் நாங்கள் ஆலோசனை பெற்றிருக்கிறோம். அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த மருத்துவர்களும் ஒன்றாக இணைந்து வேலை செய்யும் இந்த முறை ‘பராமரிப்பு மாதிரி’ எனப்படுகிறது.

### அனைத்துத் தெரிவுகளுக்கும், எங்களது பராமரிப்பு மாதிரி பின்வருவனவற்றை முன்மொழிகிறது.

**எப்சம் மற்றும் செயிண்ட் ஹெலியர் மருத்துவமனைகளில் பெரும்பாலான சேவைகள்** புதுப்பிக்கப்பட்ட கட்டிடங்களில் அமைந்திருப்பதாகவும், இரண்டு மருத்துவமனைகளும் ஒரு நாளில் 24 மணிநேரமும், ஆண்டுக்கு 365 நாட்களும் இயங்குவதாகவும், ஒவ்வொரு மருத்துவமனையும் அவசரச் சிகிச்சை மையங்களைக் கொண்டதாகவும் இருக்கும். மிகவும் உடல்நிலை சரியில்லாமல் வரும் நோயாளிகள், **சிறப்பு வல்லுநர்களின் பராமரிப்பு தேவைப்படுபவர்கள்**, மருத்துவமனையில் நடைபெறும் பிரசவங்கள் ஆகிய அனைத்துக் கவனிப்புகளும் அதிநவீன கட்டிடங்களில் ஒரே இடத்தில் கிடைக்கும் விதமாக ஆறு முக்கியச் சேவைகளை நாங்கள் ஒன்றாக இணைப்போம். சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனைப் பணியாளர்கள் இரவுபகலாக நிபுணத்துவமிக்க பராமரிப்பு வழங்க ஒன்றிணைந்து பணிபுரிய முடியும் என்பது இதன் அர்த்தமாகும். இந்தச் சேவைகள் எப்சம் மருத்துவமனை, செயிண்ட் ஹெலியர் மருத்துவமனை அல்லது சட்டன் மருத்துவமனையில் அமைந்திருக்கலாம்.

### இந்த அனைத்துத் தெரிவுகளிலும், எப்சம் மற்றும் செயிண்ட் ஹெலியர் மருத்துவமனைகள் பின்வருவனவற்றைத் தொடர்ந்து வழங்கும்.

- **அவசரச் சிகிச்சை மையங்கள்** தாங்களாகவே மருத்துவமனைக்கு வர இயலும் நிலையிலுள்ள, உயிருக்கு அச்சுறுத்தல் இல்லாத நோயாளிகளுக்காக ஒரு நாளில் 24 மணிநேரமும், ஒரு ஆண்டில் 365 நாட்களும் திறந்திருக்கின்றன (தற்சமயம் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவைப் பயன்படுத்துகின்ற நோயாளிகளில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு பேர்).
- **வெளிநோயாளிச் சேவைகள்** செயிண்ட் ஹெலியர் மருத்துவமனையில் பேறுகாலத்திற்கு முந்தைய மற்றும் பேறுகாலத்திற்குப் பிந்தைய பராமரிப்பு மற்றும் சிறுநீரக டயாலிசிஸ் உட்பட, மருத்துவமனை மருத்துவர்களின் தொடர் சிகிச்சை மற்றும் முதலாவது சந்திப்புக்கு வருபவர்களுக்காக.
- **நோய்கண்டறிதல் சேவைகள்,** எக்ஸ்-ரே, எண்டாஸ்கோப்பி, நோய்க்குறியாய்வு, அல்ட்ராசவுண்ட், ரேடியாலஜி மற்றும் எம்ஆர்ஐ ஸ்கேன்கள் உட்பட.
- **திட்டமிடப்பட்ட பராமரிப்பு நடைமுறைகள்,** உதாரணமாக, ஒரு நாள் அறுவைச் சிகிச்சைகள், சிறு அறுவைச் சிகிச்சை, ஊசிகள், கதிரியக்கச் சிகிச்சை மற்றும் வேதிச் சிகிச்சை. தென்மேற்கு இலண்டனில் உள்ள எலக்டிவ் ஆர்த்தோபீடிக் சென்டர், எப்சம் மருத்துவமனையிலேயே தொடர்ந்து இருக்கும்.



- **மருத்துவமனையின் மறுவாழ்வுப் படுக்கைகள்,** குறிப்பாக நோயிலிருந்து மீண்டு வரும் முதியவர்களுக்கு அல்லது அவர்கள் மேலும் நோய்வாய்ப்படாமல் தடுப்பதற்கு.

**நாங்கள் ஆறு முக்கியச் சேவைகளை புதிய அதிநவீன சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனையில் ஒரே இடத்தில் ஒன்றிணைக்க விரும்புகிறோம்.**

- **ஒரு முக்கியமான அவசரப் பிரிவு** – முக்கிய அவசரநிலைகள், புத்துயிரளித்தல் மற்றும் குழந்தைகளுக்கான விபத்து மற்றும் அவசரச் சிகிச்சை வல்லுநர் உள்ளிட்ட உயிருக்கு ஆபத்தான நிலைமைகளுடன் வருகின்ற அதிக பாதிப்புக்குள்ளான நோயாளிகளுக்கு.
- **தீவிரமான மருந்து** – மிக அவசரமான மருத்துவத் தேவைகள் கொண்ட நோயாளிகளுக்கு, உதாரணமாக கடுமையான நிமோனியா, உள்நோயாளி சிறுநீரகச் சேவைகள், மற்றும் பக்கவாதம் அல்லது புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கான சிறப்பு மற்றும் அவசரகாலச் சிகிச்சை போன்றவற்றுக்கு.
- **தீவிரக் கவனிப்பு** – உயிருக்கு ஆபத்தான மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்புத் தேவைப்படும் நிலைமைகளைக் கொண்ட நோயாளிகளின் மருத்துவ வல்லுநர் கவனிப்புக்காக – வழக்கமாக ஒரு தீவிரச் சிகிச்சைப் பிரிவில்
- **அவசரகால அறுவைச் சிகிச்சை** – கடுமையான குடல்வால் அழற்சி போன்ற நிலைமைகளுக்கான அவசர அறுவைச்சிகிச்சை மதிப்பீடு, சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சைகள் தேவைப்படுகின்ற நோயாளிகளுக்காக. இவர்கள் NHS -இல் உள்ள அதிக உடல்நலக் குறைவு கொண்ட நோயாளிகளில் சிலர் ஆவர், இந்த சேவை செயிண்ட் ஹெலியர் மருத்துவமனையில் ஏற்கனவே ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- **பிரசவங்கள்** – அதிக சிக்கலான பிரசவங்களுக்கும், வீட்டிலேயே பிரசவித்துக்கொள்ள விரும்புகின்ற பெண்களுக்குத் தேவையான ஆதரவு வழங்குவதற்கும் மகப்பேறு உதவியாளரின் தலைமையிலான ஒரு பிரிவையும், ஆலோசனைப் பிரிவையும் உருவாக்குவதன் மூலம் தற்போதைய பிரசவச் சேவைகளை ஒன்றாக இணைத்தல். (பெண்கள் சமுதாயத்தில் அல்லது எப்சம் மற்றும் செயிண்ட் ஹெலியர் மருத்துவமனைகளில் இப்போது பெறுவதைப் போன்ற அதே சேவையை குழந்தை பிறப்பதற்கு முன்னரும் பிறந்த பின்னரும் தொடர்ந்து பெறுவார்கள்).
- **குழந்தை மருத்துவ உள்நோயாளி பிரிவு** – சிகிச்சை மற்றும் கண்காணிப்புக்காக மருத்துவமனையில் இரவு முழுவதும் தங்க நேரிடுகின்ற குழந்தைகளுக்கு.

புதிய சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனை எப்சம், செயிண்ட் ஹெலியர் அல்லது சட்டன் மருத்துவமனையில் அமையலாம். எந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், புதிய மருத்துவமனை கட்டப்படும் வரை ஆறு சேவைகளும் ஒன்றிணைக்கப்பட மாட்டாது. வேலை தொடங்கப்பட்டவுடன், பல்வேறு தெரிவுகளில் ஒவ்வொன்றையும் கட்டுவதற்கு நான்கு முதல் ஏழு வருடங்கள் ஆகிவிடும்.



# புதிய சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனையின் இடத்துக்கான தெரிவுகளை ஒப்பிடுதல்

முன்மொழிவுகளை மதிப்பிடுவதன் ஒரு பகுதியாக அவை உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிசெய்வதன் பொருட்டு அவற்றை மதிப்பிட, மதிப்பெண் வழங்க மற்றும் தரநிலைப்படுத்த எங்களுக்கு உதவ, எங்கள் முன்மொழிவுகளை உருவாக்கும்போது ஒவ்வொரு நிலையிலும் குடியிருப்பாளர்களிடமிருந்தும், நோயாளிகள் மற்றும் பராமரிப்பாளர்களிடமிருந்தும் கேட்டறிந்த தகவல்களை நாங்கள் பயன்படுத்தியிருக்கிறோம். **(www.improvinghealthcaretogether.org.uk)** என்ற **எங்கள் வலைத்தளத்தில் கிடைக்கின்ற எங்களது கலந்தாலோசனை சுருக்க ஆவணத்தில் கூடுதல் தகவல்களை நீங்கள் அறிந்துகொள்ளலாம்.**

சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனைக்காக எங்களுக்குப் பிடித்தமான இடத்தையும், நாங்கள் பயன்படுத்தும் வரன்முறைகளையும் தேர்ந்தெடுக்கும்போது நாங்கள் எவ்வாறு மூன்று மருத்துவமனைகளையும் ஒப்பீடு செய்தோம் என்பதை இந்த அட்டவணை காண்பிக்கிறது. நாங்கள் விரும்பித் தேர்ந்தெடுத்திருப்பது சட்டன் மருத்துவமனை என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.

அனைத்துத் தெரிவுகளுக்கும், கார் அல்லது நீல விளக்கு பொருத்திய ஆம்புலன்ஸில் சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனையை வந்தடைய பெரும்பாலான மக்கள் எடுத்துக்கொள்ளும் நேரத்தில் எந்த மாற்றமும் இருக்காது. கார் அல்லது நீல விளக்கு பொருத்திய ஆம்புலன்ஸில் பயணிக்கும் 99% -க்கு மேற்பட்ட மக்கள் 30 நிமிடங்களுக்குள் அந்த இடத்தைச் சென்றடைவார்கள்.

## வரன்முறைகள்

### பராமரிப்பின் தரம்
இது மருத்துவமனைப் பராமரிப்பின் பாதுகாப்பு மற்றும் தரத்தை மேம்படுத்துமா, நோயாளியின் அனுபவத்தை மேம்படுத்துமா, தேவைப்படும் எண்ணிக்கையில் படுக்கைகளை வழங்குமா மற்றும் தொழிலாளர், பணியமர்த்துதல் மற்றும் தக்கவைத்தல் பிரச்சனைகளைத் தீர்க்குமா?

### நீண்டகால மருத்துவ நிலைத்தன்மை
இது உடனடி மற்றும் அவசரப் பராமரிப்புக்கான அணுகலை மேம்படுத்துகிறதா மற்றும் நோயாளிகளுக்கு வேறு மருத்துவ நன்மைகள் ஏதாவது உள்ளனவா?

### உள்ளூர் மக்களின் உடல்நலத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்
வயதானவர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகங்களிலிருந்து வரும் மக்கள் மீதான தாக்கம் என்னவாக இருக்கும்?

### NHS நீண்ட காலத் திட்டத்துடன் பொருத்தம்
அது NHS நீண்டகாலத் திட்டத்துடன் பொருந்துகிறதா மற்றும் உடல்நல மற்றும் பராமரிப்புச் சேவைகளை ஒன்றிணைக்க ஆதரவளிக்கிறதா?

### பயணம் உள்ளிட்ட அணுகல்
பயணம் மற்றும் அணுகல் மீதான விளைவு என்னவாக இருக்கும்?

### அதை அளிப்பது எந்த அளவுக்கு எளிதானது?
இதைக் கட்டுவது எந்த அளவுக்குச் சிக்கலானதாக இருக்கும் மற்றும் இதற்கு எவ்வளவு காலமாகும்? அருகிலுள்ள மருத்துவமனைகள் மீது இதன் தாக்கம் என்னவாக இருக்கும்?

### நிதி
மருத்துவமனைக் கட்டிடங்களுக்கான திட்டமிட்ட ஆயுட்காலமாகிய 50 ஆண்டுகளில் கட்டுவதற்கும் நீண்டகால நிதிப் பலனைப் பெறுவதற்கும் NHS -க்கு தேவையான மூலதனச் செலவு என்னவாக இருக்கும்?




| சட்டன் | செயிண்ட் ஹெலியர் | எப்சம் |
|---|---|---|
| முன்மொழியப்பட்ட மாற்றங்கள் அனைத்துத் தெரிவுகளிலும் மேம்பட்ட தரமான பராமரிப்பை வழங்கும்.<br>அனைத்துத் தெரிவுகளிலும், நாங்கள் அளிக்கும் தரம் ஒரே மாதிரியானதாக இருக்கும், ஒரே எண்ணிக்கையிலான படுக்கைகள் இருக்கும் (இப்போது இருக்கும் படுக்கைகளின் எண்ணிக்கையில் சிறு அதிகரிப்பு) மற்றும் தொழிலாளர் பிரச்சனைகள் தீர்க்கப்படும். | | |
| ஒரு ஆண்டின் 365 நாட்களிலும், ஒரு நாளில் 24 மணிநேரமும் திறந்திருக்கின்ற மூன்று அவசரச் சிகிச்சை மையங்கள்.<br>ராயல் மார்ஸ்டனுடன் அமைந்திருப்பது எப்சம் மற்றும் செயிண்ட் ஹெலியர் புற்றுநோய் நோயாளிகளுக்கான பராமரிப்பை மேம்படுத்தும். | ஒரு ஆண்டின் 365 நாட்களிலும், ஒரு நாளில் 24 மணிநேரமும் திறந்திருக்கின்ற இரண்டு அவசரச் சிகிச்சை மையங்கள். | ஒரு ஆண்டின் 365 நாட்களிலும், ஒரு நாளில் 24 மணிநேரமும் திறந்திருக்கின்ற இரண்டு அவசரச் சிகிச்சை மையங்கள். |
| வயதானவர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகங்களிலிருந்து வரும் மக்களுக்கான பயணத்தின் மீது குறைவான ஒட்டுமொத்த தாக்கம். | வயதானவர்களுக்கான பயணத்தின் மீது அதிக தாக்கம் மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகங்களிலிருந்து வரும் மக்களுக்கான பயணத்தின் மீது குறைவான தாக்கம். | வயதானவர்களுக்கான பயணத்தின் மீது குறைவான தாக்கம் மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகங்களிலிருந்து வரும் மக்களுக்கான பயணத்தின் மீது அதிக தாக்கம். |
| அனைத்துத் தெரிவுகளும் NHS நீண்ட காலத் திட்டத்தை ஒத்திருப்பதாக இருக்கும். | | |
| சராசரி பயண நேரங்களில் மிகச் சிறிய அதிகரிப்பு. சர்ரே மக்கள் வசிக்கும் இடங்கள் டவுன்ஸ், சட்டன் மற்றும் மெர்டன் பகுதிகளுக்கு மையமான இடமாக சட்டன் அமைந்திருப்பதால் குறைவான உள்ளூர் மக்கள் மட்டுமே அதிக தொலைவு பயணிக்க வேண்டியிருக்கும். | சராசரிப் பயண நேரங்களில் இரண்டாவது பெரிய அதிகரிப்பு. அதிகமான உள்ளூர் மக்கள் மிகவும் சிக்கலான பயணங்களுடன் தொலைதூரம் பயணிக்க வேண்டியிருக்கும். | சராசரி பயண நேரத்தில் மிகப்பெரிய அதிகரிப்பு. மிக அதிக எண்ணிக்கையிலான உள்ளூர் மக்கள் மிகவும் சிக்கலான பயணங்களுடன் தொலைதூரம் பயணிக்க வேண்டியிருக்கும் |
| கட்டுவது எளிது.<br>கட்டுவதற்கு நான்கு ஆண்டுகள் ஆகும்.<br>அருகிலுள்ள மருத்துவமனைகளில் குறைவான பாதிப்பு – 50 படுக்கைகள் பிற உள்ளூர் மருத்துவமனைகளுக்குச் செல்கின்றன. | கட்டுவது மிகவும் சிக்கலானது.<br>கட்டுவதற்கு ஏழு ஆண்டுகள் ஆகும்.<br>அருகிலுள்ள மருத்துவமனைகளில் அதிக பாதிப்பு - 81 படுக்கைகள் பிற உள்ளூர் மருத்துவமனைகளுக்குச் செல்கின்றன. | கட்டுவது மிகவும் சிக்கலானது.<br>கட்டுவதற்கு ஆறு ஆண்டுகள் ஆகும்.<br>அருகிலுள்ள மருத்துவமனைகளில் மிக அதிக பாதிப்பு - 205 படுக்கைகள் பிற உள்ளூர் மருத்துவமனைகளுக்குச் செல்கின்றன. |
| கட்டுவதற்கு அதிக செலவு ஆகும்: £511 மில்லியன். இது அதிகமான புதிய கட்டிடங்களைக் கொண்டுள்ளது, ஆனால் தன் பகுதியில் அதிக நோயாளிகளைக் கொண்டிருப்பதால் இது வரி செலுத்துபவர்களுக்கு மிகச் சிறந்த பலனளிப்பதாக இருக்கிறது. ராயல் மெர்ஸ்டனுடன் இணைந்து அமைந்திருப்பதால் கூடுதலான நன்மைகள் உள்ளன. | கட்டுவதற்கு குறைந்த செலவே ஆகும்: £430 மில்லியன். இது அதிக அளவிலான புதுப்பிக்கப்பட்ட கட்டிடங்களைப் பெற்றிருப்பதாலும் இந்தப் பகுதியில் அதிகமான நோயாளிகளைப் பெற்றிருப்பதாலும் இது வரி செலுத்துபவர்களுக்கு நடுத்தர பலனளிப்பதாக இருக்கிறது. | கட்டுவதற்கு நடுத்தர செலவு ஆகும்: £466 மில்லியன். கட்டிடத்தின் அளவு சிறிதாக இருப்பதால் இது இந்தப் பகுதியில் குறைந்த எண்ணிக்கையிலான நோயாளிகளையே பெற்றிருக்கிறது. மற்ற மருத்துவமனைகளிடம் தேவைப்படும் மிகப்பெரிய முதலீட்டையும் இது கொண்டிருப்பதால் இது வரி செலுத்துவோருக்கு மிகக் குறைந்த மதிப்புக் கொண்டதாக இருக்கிறது. |

## உயர்தரமான பாதுகாப்பான பராமரிப்பை வழங்குவதற்கும், சிறந்த பணியாளர்களை ஈர்த்துத் தக்கவைக்கவும், உங்களுக்கும் உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் வருங்காலத்தில் பல தலைமுறைகளுக்கு சிறந்த கவனிப்பை வழங்கவும் நாங்கள் விரும்புகிறோம்.

## நம் பகுதியில் மருத்துவமனைச் சேவைகள் வழங்கப்படும் முறையை நாங்கள் மாற்றாவிட்டால், தரமும் பாதுகாப்பும் மோசமடைந்துவிடும் என்பது தெளிவு.

## தயவுசெய்து எங்களுடன் பேசுங்கள், மேலும் இந்த முன்மொழிவுகள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை எங்களிடம் சொல்லுங்கள்.

## உங்கள் கருத்துக்களைக் கவனமுடன் கேட்கிறோம்.

உங்கள் கருத்தைச் சொல்வதற்குப் பல வழிகள் உள்ளன.

இந்த ஆவணத்தின் இறுதியில் அல்லது எங்கள் வலைத்தளத்தில் கொடுக்கப்பட்டுள்ள கேள்வித்தாளை (www.improvinghealthcaretogether.org.uk) நிரப்பவும்.

உங்கள் கருத்துக்களை எங்களுக்குச் சொல்ல எங்களது உள்ளூர் கருத்துக் கேட்பு நிகழ்ச்சிக்கு வாருங்கள்.

hello@improvinghealthcaretogether.org.uk என்ற முகவரிக்கு எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

ட்விட்டரில் (@IHTogether) எங்களுக்குச் செய்தி அனுப்பவும் அல்லது எங்களது ஃபேஸ்புக் பக்கத்தைப் பார்வையிடவும் (@ImprovingHealthcareTogether).

Opinion Research Services, FREEPOST SS1018,
PO Box 530, Swansea, SA1 1ZL என்ற முகவரியில் எங்களுக்கு எழுதுங்கள்

02038 800 271 என்ற எண்ணில்எங்களை அழைக்கவும்.

07500 063191 என்ற எண்ணில் எங்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பவும்.

கலந்தாலோசனைப் பின்னூட்டத்தை நிர்வகிக்க ஒப்பீனியன் ரிஸர்ச் சர்வீசஸ் (ORS) என்ற சுயாதீன ஆராய்ச்சி நிறுவனத்தை நாங்கள் நியமித்துள்ளோம். ORS சுயாதீனமான கலந்தாலோசனை அறிக்கையை வழங்கும், அதே நேரம் தனிநபர்களிடமிருந்து நாங்கள் பெறும் பின்னூட்டம் பெயரடையாளமின்றி இருக்கும் என்பதையும் அது உறுதிசெய்யும். நிறுவனங்களால் அல்லது அதிகாரப்பூர்வத் தகுதியில் செயல்படும் மக்களால் வழங்கப்படும் கருத்துக்கள் முழுமையாக வெளியிடப்படும். **ORS** ஆனது இந்தக் கலந்தாலோசனையில் நீங்கள் வழங்கும் எந்தத் தகவலையும் சமீபத்திய தரவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுக்கு இணங்க செயலாக்கம் செய்யும்.

உங்கள் தகவல்களை ORS இந்தக் கலந்தாலோசனைக்காக மட்டுமே பயன்படுத்தும். ஏதேனும் முடிவுகள் இறுதி செய்யப்பட்ட பிறகு உங்களை அடையாளம் காட்டக்கூடிய தனிப்பட்ட தகவல்கள் எதையும் ஒரு ஆண்டுக்குப் பிறகு அவர்கள் வைத்திருக்க மாட்டார்கள். கூடுதல் தகவல்களை அறிந்துகொள்ள, www. improvinghealthcare together.org.uk என்ற இணையதளத்துக்குச் சென்று தேடல் பெட்டியில் ‘கலந்தாலோசனை தனியுரிமை அறிவிப்பு’ அல்லது www.ors.org.uk/privacy என தட்டச்சு செய்யவும்.

NHS

ஒன்றிணைந்து உடல்நலப் பராமரிப்பை மேம்படுத்துதல்
2020 முதல் 2030 வரை

## எங்களுடன் பேசுங்கள் - உங்கள் கருத்துக்களைக் கவனமுடன் கேட்கிறோம்

# கலந்தாலோசனைக்கான கேள்வித்தாள்

எப்சம் மற்றும் செயிண்ட் ஹெலியர் மருத்துவமனைகளில் முதலீடு செய்வதற்கும் எப்சம், செயிண்ட் ஹெலியர் அல்லது சட்டன் மருத்துவமனையில் அமையவுள்ள ஒரு சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனையைக் கட்டுவதற்குமான எங்கள் முன்மொழிவு.



இது NHS சர்ரே டவுன்ஸ் மருத்துவ ஆணையக் குழு, NHS சட்டன் மருத்துவ ஆணையக் குழு மற்றும் NHS மெர்டன் மருத்துவ ஆணையக் குழு ஆகியவற்றால் நடத்தப்படும் ஒரு முறையான பொதுக் கலந்தாலோசனை ஆகும். இது 2020 ஜனவரி 8 முதல் ஏப்ரல் 1 வரை நடைபெற இருக்கிறது.

# கலந்தாலோசனைக்கான கேள்விகள்

கலந்தாலோசனைக் கேள்வித்தாளுக்கான பதில்களையும், பிற கலந்தாலோசனைப் பின்னூட்டத்தையும் நிர்வகிக்க ஒப்பீனியன் ரிஸர்ச் சர்வீசஸ் (ORS) என்ற சுயாதீன ஆராய்ச்சி நிறுவனத்தை நாங்கள் நியமித்துள்ளோம். ORS சுயாதீனமான கலந்தாலோசனை அறிக்கையை வழங்கும், அதே நேரம் தனிநபர்களிடமிருந்து நாங்கள் பெறும் பின்னூட்டம் பெயரடையாளமின்றி இருக்கும் என்பதையும் அது உறுதிசெய்யும். நிறுவனங்களால் அல்லது அதிகாரப்பூர்வத் தகுதியில் செயல்படும் மக்களால் வழங்கப்படும் கருத்துக்கள் முழுமையாக வெளியிடப்படும்.

கேள்வித்தாளில் உள்ள அனைத்துக் கேள்விகளும் விருப்பம் சார்ந்தவையாகும். ORS ஆனது இந்தக் கலந்தாலோசனையில் நீங்கள் வழங்கும் எந்தத் தகவலையும் சமீபத்திய தரவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுக்கு இணங்க செயலாக்கம் செய்யும். உங்கள் தகவல்களை ORS இந்தக் கலந்தாலோசனைக்காக மட்டுமே பயன்படுத்தும். ஏதாவது முடிவுகள் இறுதி செய்யப்பட்ட பிறகு உங்களை அடையாளம் காட்டக்கூடிய தனிப்பட்ட தகவல்கள் எதையும் ஒரு ஆண்டுக்குப் பிறகு அவர்கள் வைத்திருக்க மாட்டார்கள்.

கூடுதல் தகவல்களுக்கு **www.improvinghealthcaretogether.org.uk -க்குச் சென்று தேடல் பெட்டியில் கலந்தாலோசனை தனியுரிமை அறிவிப்பு ('consultation privacy notice')** அல்லது **www.ors.org.uk/privacy என தட்டச்சு செய்யவும்.**

## Q1

## எங்களது பராமரிப்பு மாதிரி (அல்லது வேலை செய்வதற்கான புதிய வழி)

**தற்போதைய மருத்துவமனைகளில் உள்ள பெரும்பாலான சேவைகளை புதுப்பிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு மாற்றுவதும், மிகவும் உடல்நிலை சரியில்லாமல் வரும் நோயாளிகள், சிறப்பு வல்லுநர்களின் பராமரிப்பு தேவைப்படுபவர்கள், மருத்துவமனையில் நடைபெறும் பிரசவங்கள் ஆகிய அனைத்துக் கவனிப்புகளும் அதிநவீன சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனையில் ஒரே இடத்தில் கிடைக்கும் விதமாக ஆறு முக்கியச் சேவைகளை ஒன்றிணைப்பதும் எங்கள் முன்மொழிவு ஆகும்.**

**கீழே உள்ள அட்டவணையில், சர்ரே டவுன்ஸ், சட்டன் மற்றும் மெர்டன் பகுதியில் வசிக்கும் நபர்களுக்கு இந்த முன்மொழிவு எந்த அளவுக்கு நன்மையளிப்பதாக அல்லது மோசமானதாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள் எனச் சொல்வதற்கு தயவுசெய்து ஒரு பெட்டியை டிக் செய்யவும்.**

| இது மிக மோசமான தீர்வு | இது மோசமான தீர்வு | இது மோசமான தீர்வும் அல்ல நல்ல தீர்வும் அல்ல | இது நல்ல தீர்வு | இது மிக நல்ல தீர்வு |
|---|---|---|---|---|
| | | | | |

**உங்கள் பதிலுக்கான காரணங்களை கீழே உள்ள இடத்தில் குறிப்பிடவும்.**

# Q2
# சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனை அமையும் இடம்

## Q2a
## எங்களது விருப்பமான இடமாக சட்டன் மருத்துவமனை

கீழே உள்ள அட்டவணையில், சர்ரே டவுன்ஸ், சட்டன் மற்றும் மெர்டன் பகுதியில் வசிக்கும் நபர்களுக்கு சட்டன் மருத்துவமனையில் புதிய சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனையைக் கட்டுவது எந்த அளவுக்கு நன்மையளிப்பதாக அல்லது மோசமானதாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள் எனச் சொல்வதற்கு தயவுசெய்து ஒரு பெட்டியை டிக் செய்யவும்.

| இது மிக மோசமான தீர்வு | இது மோசமான தீர்வு | இது மோசமான தீர்வும் அல்ல நல்ல தீர்வும் அல்ல | இது நல்ல தீர்வு | இது மிக நல்ல தீர்வு |
|---|---|---|---|---|
| | | | | |

உங்கள் பதிலுக்கான காரணங்களை கீழே உள்ள இடத்தில் குறிப்பிடவும்.

## Q2b
## புதிய சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனைக்கான இடமாக செயிண்ட் ஹெலியர் மருத்துவமனை

**கீழே உள்ள அட்டவணையில், சர்ரே டவுன்ஸ், சட்டன் மற்றும் மெர்டன் பகுதியில் வசிக்கும் நபர்களுக்கு செயிண்ட் ஹெலியர் மருத்துவமனையில் புதிய சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனையைக் கட்டுவது எந்த அளவுக்கு நன்மையளிப்பதாக அல்லது மோசமானதாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள் எனச் சொல்வதற்கு தயவுசெய்து ஒரு பெட்டியை டிக் செய்யவும்.**

| இது மிக மோசமான தீர்வு | இது மோசமான தீர்வு | இது மோசமான தீர்வும் அல்ல நல்ல தீர்வும் அல்ல | இது நல்ல தீர்வு | இது மிக நல்ல தீர்வு |
|---|---|---|---|---|
| | | | | |

**உங்கள் பதிலுக்கான காரணங்களை கீழே உள்ள இடத்தில் குறிப்பிடவும்.**

## Q2c
## புதிய சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனைக்கான இடமாக எப்சம் மருத்துவமனை

**கீழே உள்ள அட்டவணையில், சர்ரே டவுன்ஸ், சட்டன் மற்றும் மெர்டன் பகுதியில் வசிக்கும் நபர்களுக்கு எப்சம் மருத்துவமனையில் புதிய சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனையைக் கட்டுவது எந்த அளவுக்கு நன்மையளிப்பதாக அல்லது மோசமானதாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள் எனச் சொல்வதற்கு தயவுசெய்து ஒரு பெட்டியை டிக் செய்யவும்.**

| இது மிக மோசமான தீர்வு | இது மோசமான தீர்வு | இது மோசமான தீர்வும் அல்ல நல்ல தீர்வும் அல்ல | இது நல்ல தீர்வு | இது மிக நல்ல தீர்வு |
|---|---|---|---|---|
| | | | | |

**உங்கள் பதிலுக்கான காரணங்களை கீழே உள்ள இடத்தில் குறிப்பிடவும்.**

# Q3
# போக்குவரத்து மற்றும் பயணத்தை மேம்படுத்த எது உதவும்?

**மூன்று விருப்பத்தெரிவுகளில் ஏதாவது ஒன்றுக்கு புதிய சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனைக்கான போக்குவரத்து மற்றும் பயணத்தை எது மேம்படுத்தும்?**

அந்த இடம் **எப்சம் மருத்துவமனையாக இருந்திருந்தால்?**

அந்த இடம் **செயிண்ட் ஹெலியர் மருத்துவமனையாக இருந்திருந்தால்?**

அந்த இடம் **சட்டன் மருத்துவமனையாக இருந்திருந்தால்?**

# Q4
# எங்கள் முன்மொழிவுகள் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் எவ்வாறு பாதிக்கும்?

**எங்களின் ஏதேனும் முன்மொழிவுகள் உங்களை, உங்கள் குடும்பத்தை அல்லது உங்களுக்குத் தெரிந்த மற்ற நபர்களை நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ பாதிக்கும் என நீங்கள் கருதினால், நீங்கள் ஏன் அவ்வாறு நினைக்கிறீர்கள் என்பதை தயவுசெய்து கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் தெரியப்படுத்தவும்.**

# Q5
# வேறு எதை நாங்கள் கருத்தில் கொள்ளவேண்டும்?

**சர்ரி டவுன்ஸ், சட்டன் மற்றும் மெர்டன் பகுதியில் வசிக்கும் மக்களுக்கான சிறப்பு அவசரச் சிகிச்சை மருத்துவமனைக்கான சிறந்த தெரிவைத் தீர்மானிக்கும்போது வேறு எவற்றையெல்லாம் நாங்கள் கருத்தில் கொள்ளவேண்டும் என்பதை எங்களுக்குச் சொல்ல கீழே உள்ள இடத்தைப் பயன்படுத்தவும்.**

# Q6
## நாங்கள் கருத்தில் கொள்ளவேண்டிய வேறு ஏதேனும் தீர்வுகள் உங்களிடம் உள்ளதா?

## நன்றி

உங்கள் கண்ணோட்டங்களை எங்களுக்குத் தெரிவிக்க நேரம் எடுத்துக்கொண்டதற்கு நன்றி. கலந்தாலோசனை 8 ஜனவரி 2020 முதல் 1 ஏப்ரல் 2020 வரை நடைபெறும் உங்கள் கண்ணோட்டங்கள் ஒப்பீனியன் ரிஸர்ச் சர்வீசஸ் (ORS) என்ற சுயாதீன ஆராய்ச்சி நிறுவனத்தால் சேகரிக்கப்பட்டு, இறுதி முடிவு எடுப்பதற்காக NHS குழுவிற்கு அனுப்பப்படுகின்றன.

இந்தச் செயல்முறை பற்றிய கூடுதல் தகவல்களுக்கு அல்லது இந்தத் திட்டம் பற்றிய புதுப்பிப்புகளைப் பெற பதிவு செய்வதற்கு தயவுசெய்து hello@improvinghealthcaretogether.org.uk என்ற முகவரிக்கு எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது 02038 800 271 என்ற எண்ணில் எங்களை அழைக்கவும் அல்லது 07500 063191 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பவும்.

# உங்களைப் பற்றி மேலும் சில விவரங்கள்

பன்முகத்தன்மையின் நன்மைகளை நாங்கள் அறிந்துகொண்டு ஊக்குவிக்கிறோம் மற்றும், ஒருவருடைய வயது, இயலாமை, பாலியல், பாலினம், திருமணம் மற்றும் சமுதாயக் கூட்டாண்மை நிலை, கர்ப்பம் மற்றும் தாய்மை, இனம், மதம் அல்லது நம்பிக்கை அல்லது பாலுணர்வு எதுவாக இருந்தாலும், அனைவரையும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எங்கள் சேவைகள் நாங்கள் சேவை புரியும் மக்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்ய, கீழே உள்ள சிறு கண்காணிப்பு பிரிவை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம். நாங்களும் ORS -ம் இந்தக் கலந்தாலோசனைக்காக மட்டுமே உங்கள் தகவல்களைப் பயன்படுத்துவோம். ஏதாவது முடிவுகள் இறுதி செய்யப்பட்ட பிறகு உங்களை அடையாளம் காட்டக்கூடிய தனிப்பட்ட தகவல்கள் எதையும் ஒரு ஆண்டுக்குப் பிறகு நாங்கள் வைத்திருக்க மாட்டோம். யுகே-வுக்குள் பொருந்தக்கூடிய தரவுப் பாதுகாப்புச் சட்டங்கள் அனைத்தையும் நாங்கள் கடைப்பிடிக்கிறோம், இதில் ஐரோப்பிய பொது தரவுப் பாதுகாப்பு ஒழுங்குமுறை (GDPR) மற்றும் யுகே-யின் சட்டங்கள் உள்ளடங்கும்.

**1 பின்வருபவர்களில் யாருக்கு நீங்கள் பதிலளிக்கிறீர்கள்**
**தயவுசெய்து பொருந்தக்கூடியவற்றை டிக் செய்யவும்.**

- ☐ ஒரு தனிப்பட்ட குடியிருப்பாளர்
- ☐ ஒரு பராமரிப்பாளர்
- ☐ 16 வயதுக்குட்பட்ட குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்
- ☐ NHS பணியாளர் உறுப்பினர்
- ☐ ஒரு நிறுவனத்தின் பிரதிநிதி – தயவுசெய்து உங்கள் நிறுவனத்தின் பெயரைக் குறிப்பிடவும்

பின்னர் கேள்வி 12 க்குச் செல்லவும்.................................................................

- ☐ மற்றவை - தயவுசெய்து குறிப்பிடவும் .................................................................

**2 நீங்கள் எந்தப் பகுதியில் வசிக்கிறீர்கள்?**
**தயவுசெய்து பின்வரும் தெரிவுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்**

- ☐ சர்ரே டவுன்ஸ்
- ☐ சட்டன்
- ☐ மெர்டன்
- ☐ பிற பகுதி
- ☐ சொல்ல விருப்பமில்லை

**3 உங்கள் வயது என்ன?**

☐ 18 க்குக் கீழ் ☐ 18-24 ☐ 25-34 ☐ 35-44 ☐ 45-54

☐ 55-64 ☐ 65-74 ☐ 75 அல்லது அதற்கு மேல் ☐ சொல்ல விருப்பமில்லை

**4 உங்கள் பாலினம் என்ன?**

☐ ஆண் ☐ பெண் ☐ மற்றவர் ☐ சொல்ல விருப்பமில்லை

**5 மேலே காண்பித்துள்ள உங்கள் பாலினம் நீங்கள் பிறந்தபோது இருந்த பாலினமா?**

☐ ஆம் ☐ இல்லை ☐ சொல்ல விருப்பமில்லை

**6 நீங்கள் தற்போது கர்ப்பமாக இருக்கிறீர்களா அல்லது கடந்த ஒரு ஆண்டுக்குள் உங்களுக்கு குழந்தை பிறந்திருக்கிறதா?**

☐ ஆம் ☐ இல்லை ☐ பொருந்தாது ☐ சொல்ல விருப்பமில்லை

**7 உங்களுக்கு உடற்குறைபாடு, நீண்ட கால நோய் அல்லது உடல்நல நிலைமை இருக்கிறதா?**

☐ ஆம் ☐ இல்லை ☐ சொல்ல விருப்பமில்லை

**8 கேள்வி 7-க்கு நீங்கள் ஆம் எனப் பதிலளித்திருந்தால், தயவுசெய்து அது சம்பந்தமான உங்களுடைய உடற்குறைபாடு, நீண்ட கால நோய் அல்லது உடல்நல நிலைமை என்ன என்பதைச் சொல்லவும்.**

☐ நீண்ட கால நோய் அல்லது உடல்நல நிலைமை (உதாரணமாக, புற்றுநோய், ஹெச்ஐவி, நீரிழிவு நோய், நாள்பட்ட இதய நோய் அல்லது வலிப்பு நோய்)

☐ ஒரு மனநலப் பிரச்சனை (உதாரணமாக, மன அழுத்தம், மூளைக் கோளாறு அல்லது மனக் கலக்கம்)

☐ உடல் சார்ந்த கோளாறு அல்லது நகர்வதில் பிரச்சனை (உதாரணமாக, உங்கள் கைகளைப் பயன்படுத்துவதில் சிரமம் அல்லது ஒரு சக்கர நாற்காலி அல்லது ஊன்றுகோல் தேவைப்படுகிறது)

☐ சமூக அல்லது தகவல்தொடர்பு சிரமம் (உதாரணமாக, பேச்சு மற்றும் மொழிப் பிரச்சனை, அல்லது ஆஸ்பெர்கர்ஸ் நோய்க்குறி அல்லது மற்ற ஆட்டிச ஸ்பெக்ட்ரம் கோளாறுகள்)

☐ குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய கற்றல் சிரமம் (உதாரணமாக, டிஸ்லெக்சியா, டிஸ்பிராக்சியா அல்லது ADHD)

☐ பார்வையற்றவராக அல்லது ஓரளவு பார்வை கொண்டவராக இருப்பது

☐ காது கேளாதவராக அல்லது பகுதியளவு காது கேளாதவராக இருப்பது

☐ மேலே குறிப்பிடப்பட்டாத ஒரு உடற்குறைபாடு, உடல்நல நிலைமை, கற்றல் சிரமம் அல்லது கற்றல் வேறுபாடு

☐ சொல்ல விருப்பமில்லை

**9 எந்த இன அல்லது இனக்குழு பின்னணி உங்களைச் சிறப்பாக விவரிக்கிறது?**

☐ அராப்

☐ ஆசியர் / பிரிட்டிஷ் ஆசியர்: பங்களாதேஷி

☐ ஆசியர் / பிரிட்டிஷ் ஆசியர்: சீனர்

☐ ஆசியர் / பிரிட்டிஷ் ஆசியர்: இந்தியர்

☐ ஆசியர் / பிரிட்டிஷ் ஆசியர்: பாகிஸ்தானி

☐ ஆசியர் / பிரிட்டிஷ் ஆசியர்: மற்றவர்

☐ கருப்பர் / பிரிட்டிஷ் கருப்பர்: ஆப்பிரிக்க

☐ கருப்பர் / பிரிட்டிஷ் கருப்பர்: கரீபியர்

☐ கருப்பர் / பிரிட்டிஷ் கருப்பர்: மற்றவர்

☐ கலப்பு இனத்தவர்: கருப்பர் மற்றும் வெள்ளையர்

☐ கலப்பு இனத்தவர்: ஆசியர் மற்றும் வெள்ளையர்

☐ கலப்பு இனத்தவர்: கருப்பர் மற்றும் ஆசியர்

☐ கலப்பு இனத்தவர்: மற்றவர்

☐ பயணி: ஜிப்ஸி அல்லது ரோமப் பயணி

☐ பயணி: ஐரிஷ்

☐ வெள்ளையர்: பிரிட்டிஷ் வெள்ளையர்: ஐரிஷ்

☐ வெள்ளையர்: ஐரோப்பியர்

☐ வேறொரு பாலின அல்லது இனக்குழு பின்னணீ, தயவுசெய்து குறிப்பிடவும் ..............................

☐ சொல்ல விருப்பமில்லை

**10 பின்வரும் சொற்களில் எது உங்கள் பாலியல் உணர்வை சிறப்பாகக் குறிப்பிடுகிறது?**

- ☐ பாலியல் உணர்வற்றவர்
- ☐ இருபாலின நாட்டமுள்ளவர்
- ☐ கே அல்லது லெஸ்பியன்
- ☐ ஓரினச்சேர்க்கையாளர் அல்லது ஸ்ட்ரெயிட்
- ☐ மற்றவர்
- ☐ சொல்ல விருப்பமில்லை

**11 உங்கள் மதம் எது?**

- ☐ புத்த மதம்
- ☐ கிறித்துவ மதம்
- ☐ இந்து
- ☐ யூதர்
- ☐ முஸ்லிம்
- ☐ சீக்கியர்
- ☐ பிற மதம்
- ☐ எந்த மதமும் இல்லை
- ☐ சொல்ல விருப்பமில்லை

**12 உங்கள் முழுமையான அஞ்சல் குறியீடு என்ன?**

☐

உங்கள் அஞ்சல் குறியீட்டை நீங்கள் எங்களுக்குக் கொடுப்பது கட்டாயமில்லை, ஆனால் நீங்கள் அதைச் செய்தால் அது சர்ரே டவுன்ஸ், சட்டன் மற்றும் மெர்டன் பகுதியில் உள்ள அனைத்து மக்களையும் நாங்கள் சென்றடைவதை உறுதி செய்ய எங்களுக்கு உதவியாக இருக்கும். மேலும் அது, இந்தக் கேள்வித்தாளில் உள்ள பதில்களின் பிரதேச வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளவும் அது எங்களுக்கு உதவும்.

**உங்கள் கருத்தைச் சொல்வதற்குப் பல வழிகள் உள்ளன.**

**இந்தக் காகிதக் கேள்வித்தாளை** Opinion Research Services, FREEPOST SS1018, PO Box 530, Swansea, SA1 1ZL **என்ற முகவரிக்குத் திருப்பி அனுப்பவும்**

**உங்கள் கருத்துக்களை எங்களுக்குச் சொல்ல எங்களது உள்ளூர் கருத்துக் கேட்பு நிகழ்ச்சிக்கு வாருங்கள்.**

hello@improvinghealthcaretogether.org.uk. என்ற முகவரிக்கு **எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.**

**ட்விட்டரில்** (@IHTogether) **எங்களுக்குச் செய்தி அனுப்பவும் அல்லது எங்கள் ஃபேஸ்புக் பக்கத்தைப் பார்வையிடுங்கள்** (@ImprovingHealthcareTogether).

Opinion Research Services, FREEPOST SS1018, PO Box 530, Swansea, SA1 1ZL. **என்ற முகவரியில் எங்களுக்கு எழுதவும்**

02038 800 271 **என்ற எண்ணில்எங்களை அழைக்கவும்.**

07500 063191 **என்ற எண்ணில் எங்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பவும்.**

**நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த வேறு யாராவதோ இந்த ஆவணத்தைப் படிக்க முடியவில்லை என்றால், hello@improvinghealthcaretogether.org.uk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது 02038 800 271 என்ற தொலைபேசி எண் வாயிலாக எங்களைத் தொடர்புகொண்டால், தகவல்களை பொருத்தமான அமைப்பில் அல்லது மொழியில் வழங்க எங்களால் இயன்ற உதவிகளை நாங்கள் செய்வோம்.**

**Jeśli Ty lub Twój znajomy nie jest w stanie przeczytać tego dokumentu, prosimy o kontakt z nami pod adresem e-mail: hello@improvinghealthcaretogether.org.uk lub telefonicznie pod numerem 02038 800 271. Dołożymy wszelkich starań, by przekazać informacje w odpowiednim formacie lub języku.**

**நீங்களோ அல்லது உங்களுக்கு தெரிந்த மற்றொருவரோ இந்த ஆவணத்தைப் படித்தறிய இயவில்லை எனில், தயவுசெய்து hello@improvinghealthcaretogether.org.uk என்ற மின்னஞ்சல் அல்லது தொலைபேசி எண் 02038 800 271 மூலமாக தொடர்புகொண்டு எமக்கு தெரிவித்தால், தகுந்த மொழியிலோ அல்லது வடிவத்திலோ தகவலை உங்களுக்கு அறிவிக்க எம்மால் இயன்றவரையிலும் முயற்சி எடுப்போம்.**

**اگر آپ یا آپ کے کوئی جاننے والے اس دستاویز کو پڑھ نہیں سکتے ہیں تو برائے مہربانی اس ای میل پتہ کے ذریعہ ہم سے رابطہ کریں hello@improvinghealthcaretogether.org.uk یا اس نمبر پر فون کریں: 02038 800 271 اور ہم ان معلومات کو مناسب صورت یا زبان میں فراہم کرنے کی پوری کوشش کریں گے۔**

ஒன்றிணைந்து உடல்நலப் பராமரிப்பை மேம்படுத்துதல்
**2020 முதல் 2030 வரை**

**உங்கள் கேள்வித்தாளை அனுப்ப வேண்டிய முகவரி:**

**Opinion Research Services, FREEPOST SS1018,**
**PO Box 530, Swansea, SA1 1ZL.**

**கலந்தாலோசனைக்கான கடைசித் தேதி**
1 ஏப்ரல் 2020, புதன்கிழமை.



XLPL0110000000A5B